MAY 2024

U/ID 33207/ UCT2B/UCL2A

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை தருக.

1. தேவாரம் என்றால் என்ன?
2. திருநாவுக்கரசர் குறிப்பு வரைக.
3. சீர்காழியின் சிறப்பை எழுதுக.
4. சுந்தரரின் வாழ்வியலை எழுதுக.
5. திருவெம்பாவையின் சிறப்பைக் குறிப்பிடுக.
6. எட்டாந்திருமுறை குறித்துக் குறிப்பு தருக.
7. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் குறித்தெழுதுக.
8. குலசேகராழ்வாரின் நூல்களை எடுத்துரைக்க.
9. திருமங்கையாழ்வாரின் வாழ்வியற் குறிப்பு தருக.
10. குணங்குடி மஸ்தானின் வாழ்வியற் குறிப்பு தருக.
11. மடலிலக்கியமாவது யாது?
12. இராமலிங்க அடிகளாரின் நூல்கள் குறித்தெழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை எழுதுக.

13. ஈசனே எவ்வுயிர்க்கும் இறைவன் என்ற நாவரசரின் திருத்தாண்டகப் பெருமையை விளக்குக.

14. தோடுடைய செவியன் பதிகச்சிறப்பை எழுதுக.

15. பித்தா பிறைசூடி என்று சுந்தரர் பாடக்காரணமான நிகழ்வை விவரிக்க.

16. ஆர்த்த பிறவித் துயர்கெட பாடுவோம் என்று பாடிய திருவெம்பாவை பாடற்கருத்தை எழுதுக.

17. தேவகி கார்ணனைப் பார்த்து பாடும் திறமாக அமைந்த பாசுரச்சிறப்பை விளக்குக.

18. சிறிய திருமடலில் அமைந்த புராணக் கருத்தை விவரிக்க.

19. கந்தக்கோட்டத்தின் பெருமைகளாக வள்ளலார் உரைப்பன யாவை?

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை எழுதுக.

20. திருநாவுக்கரசரின் பதிகம் உணர்த்தும் வாழ்வியல் தத்துவங்களை விளக்குக.

21. திருவண்ணாமலையின் சிறப்பையும் இறைவன் பெருமையையும் மாணிக்கவாசகர் எங்ஙனம் புகழ்ந்துள்ளார் விளக்குக.

22. மன்னுபுகழ் என்று குலசேகராழ்வார் பெருமாள் திருமொழிகளாகப் பகர்வன யாவை?

23. தலைவிக்கு உற்றநோய் ஏற்படக் காரணம் பெருமானே என மடலூர்ந்து சென்ற நிகழ்வைப் புலப்படுத்துக.

24. குணங்குடி மஸ்தான் வெளிப்படுத்தும் பராபரக் கண்ணியின் சிறப்பை எழுதுக.
